**<u>சுருக்கம்</u>**

இயற்கை இடர்பாடுகள் – தென்மேற்கு பருவமழை 2018 – பொதுப்பணித்துறை (நீ.ஆ.து) – ஈரோடு, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் கொடிவேரி, அரக்கன் கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால்கள் மற்றும் காவேரி, வெண்ணாறு மற்றும் கல்லணை கால்வாய் ஆகியவற்றில் வெள்ளச் சேதாரப் பணிகள் மற்றும் தற்காலிக சீரமைப்பு பணிகள் ரூ.686.75 இலட்சம் (194.00+492.75) மேற்கொள்ளப்பட்டது – மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கக் கோரியது– ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை ( பே.மே.–2) துறை</u>**

**அரசாணை (நிலை) எண்.599** நாள் 27.10.2020

சார்வரி, ஐப்பசி 11
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.380, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [3(2)] துறை, நாள் 27.10.2015.
2. முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து (ம) தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து., சென்னை – 5, கடித எண். S7(1)/ 28476/உ.செ.பொ.6/2018, நாள்: 27.11.2018.
3. முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து (ம) தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து., சென்னை – 5, கடித எண். S7(1)/ 28476/ உ.செ.பொ.6/2018, நாள்: 31.01.2019.
4. மாவட்ட ஆட்சித் தலைவர், நாகப்பட்டினம், கடித எண், 4675/2018 ஊ.வ, நாள்: 30.05.2019.
5. மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர், கடித எண். பே.மே.1/32283/2018, நாள்: 13.11.2019.
6. மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு, கடித எண். 15000/2018/பே.மே. நாள்: 09.12.2019.
7. மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர், கடித எண். 244/2018/பே.மே1. நாள்: 10.01.2020.
8. முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண்.இ.இ.1(2)/6118/2018, நாள் 17.06.2020.

******

**<u>ஆணை:</u>**

பார்வை 8–ல் காணும் முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், ஈரோடு மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழையின் (2018) போது பவானி சாகர் அணையிலிருந்து 14.08.2018 முதல் உபரி நீர் திறக்கப்பட்டது. 17.08.2018 அன்று அதிகப்படியாக விநாடிக்கு 72700 கன அடி நீர் கொடிவேரி அணைக்கட்டிலிருந்து வெளியேற்றப்பட்டது. அதிக வெள்ள நீரால் கொடிவேரி அணைக்கட்டு மற்றும் அதன்

வாய்க்கால்களான தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை தலைமதகுகளில் உள்ள கட்டுமானங்கள் சேதமடைந்தது. மேலும், கர்நாடக மாநில நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக, மேட்டூர் அணை தனது முழுக் கொள்ளளவை எட்டியதால் மேட்டூர் அணையிலிருந்து 16.08.2018 முதல் 21.08.2018 முடிய 2 இலட்சம் கனஅடிக்கும் அதிகமாக உபரி நீர் வெளியேற்றப்பட்டது. பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் காவேரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய், கொள்ளிடம் ஆகிய ஆறுகளின் கரைகளில் உடைப்பு ஏற்படாமல் பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆங்காங்கே கரைபொழிவுகள் மற்றும் பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளை முன்னதாகவே கண்டறிந்து தற்காலிக சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதுதொடர்பாக, முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர், (பொது), பொதுப்பணித் துறை, சென்னை அவர்கள், கொடிவேரி அணைக்கட்டுப் பகுதிகளிலும், அதன் வாய்க்கால்களான தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை தலைமதகுகளில் உள்ள கட்டுமானங்களிலும் தற்காலிக சீரமைப்புப் (Temporary Restoration) பணிகளுக்காக மொத்தம் ரூ.194.00 இலட்சங்களுக்கு 18 மதிப்பீடுகளுக்கு, அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று வழங்குமாறு கோரியுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும், ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களும் 2018 –ம் ஆண்டு தென்மேற்குப் பருவமழை காலத்தில் ஏற்பட்ட வெள்ள சேதாரத்திற்கு கொடிவேரி அணைக்கட்டு, அரக்கன் கோட்டை வாய்க்கால், தடப்பள்ளி வாய்க்கால் ஆகியவற்றிக்கான தற்காலிக சீரமைப்பு பணிகள் மேற்கொண்டதற்கான பொதுப்பணித்துறையின் மதிப்பீடுகள் பரிந்துரை செய்து ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அதற்கான நிதி ஒதுக்கீட்டினை மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து பெற்று வழங்குமாறும் கோரியுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

2. முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் மேட்டூர் அணையிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்பட்டதன் காரணமாக தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட 215 தற்காலிக சீரமைப்பு பணிகளுக்கான ரூ.602.05 இலட்சம் மதிப்பிலான மதிப்பீடுகளுக்கு அரசிடமிருந்து உரிய நிதி ஒதுக்கீட்டினை பெற்றுத் தரும் பொருட்டு கருத்துருவினை முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சென்னை அனுப்பியுள்ளார் எனவும், அக்கடிதத்தில் கீழ்க்கண்ட விவரங்கள் அனுப்பியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பொதுப்பணித் துறையின் கோட்ட அலுவலகங்கள் வாரியாக மேற்கொள்ளப்பட்ட தற்காலிக சீரமைப்புப் பணிகளின் விபரம் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

| வ. எண் | கோட்ட அலுவலகத்தின் பெயர் | தஞ்சாவூர் | | திருவாரூர் | | நாகப்பட்டினம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) | எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) | எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) | எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
| 1 | காவிரி வடிநிலக் கோட்டம், தஞ்சாவூர் | 38 | 113.55 | 37 | 97.90 | 13 | 32.00 | 88 | 243.45 |

| வ. எண் | கோட்ட அலுவலகத்தின் பெயர் | தஞ்சாவூர் | | திருவாரூர் | | நாகப்பட்டினம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) | எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) | எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) | எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
| 2 | வெண்ணாறு வடிநிலக் கோட்டம், தஞ்சாவூர் | 42 | 93.95 | 14 | 12.90 | – | – | 56 | 106.85 |
| 3 | வெண்ணாறு வடிநிலக் கோட்டம், திருவாரூர் | – | – | – | – | 7 | 35.00 | 7 | 35.00 |
| 4 | கல்லணைக் கால்வாய்க் கோட்டம், தஞ்சாவூர் | 64 | 216.75 | – | – | – | – | 64 | 216.75 |
| | மொத்தம் | 144 | 424.25 | 51 | 110.80 | 20 | 67.00 | 215 | 602.05 |

எனவே, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 3 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூ.602.05 இலட்சம் மதிப்பிலான 215 தற்காலிக சீரமைப்பு பணிகளுக்கான மதிப்பீடுகளை இணைத்து அதற்கான நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெற்றுத்தரும் பொருட்டும் முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., சென்னை அவர்கள் கோரியுள்ளார்.

3. இந்நேர்வில், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர், 13.08.2018 முதல் 18.08.2018 வரையிலான காலத்தில் மேட்டூர் அணையின் உபரி நீர் 2,00,000 கன அடிக்கு மேல் திறந்து விடப்பட்டதன் காரணமாக நாகப்பட்டினம் மாவட்டம் திருமருகல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் உபரி நீரினால் மக்களுக்கும் அவர்கள் உடமைகளுக்கும் விவசாய நிலங்களுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் வெள்ள நீர் தேங்காமல் இருக்க பொதுப்பணித் துறையினரால் கரைகள் பலப்படுத்துதல், ஆகாயத்தாமரை வெளியேற்றுதல் உள்ளிட்ட தற்காலிக வெள்ளத் தடுப்பு பணிகள் 13 எண்ணிக்கையில் ரூ.32.00 இலட்சம் (ரூபாய் முப்பத்து இரண்டு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மேற்கொள்ளப்பட்டன எனவும் மேற்படி, அவசர அவசிய நிலைக்கருதி 13 பணிகள் மேற்கொண்டதற்கு அரசின் அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு பெற்றுத்தரக் கோரியுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர், அவர்கள் மேட்டூர் அணையிலிருந்து 16.08.2018 முதல் 21.08.2018 முடிய 2 இலட்சம் கன அடிக்கும் அதிகமாக உபரி நீர் வெளியேற்றப்பட்டதன் காரணமாக, பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் காவேரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய், கொள்ளிடம் ஆகிய ஆறுகளின் கரைகளில் உடைப்பு ஏற்படாமல் பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆங்காங்கே கரை பொழிவுகள் மற்றும் பாதிப்பு ஏற்படும் பகுதிகளை முன்னதாகவே கண்டறிந்து தற்காலிக சீரமைப்பு பணிகள்

மேற்கொள்ளப்பட்டது தொடர்பான செலவின மதிப்பீடுகள் பொதுப் பணித்துறை செயற்பொறியாளர்களின் வாயிலாக அனுப்பி வைக்கப்பட்டதை தொடர்ந்து தொடர்புடைய வட்டாட்சியர்களிடம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கான அறிக்கை கோரப்பட்டது எனவும் அதனை தொடர்ந்து வட்டாட்சியர்களின் அறிக்கைகளின் வாயிலாக தற்காலிக சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது உறுதி செய்யப்பட்டது எனவும், தற்காலிக சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறு பரிந்துரை செய்துள்ளார்.

| வ. எண். | கோட்டத்தின் பெயர் | தற்காலிக சீரமைப்பு பணிகள் விபரம் | |
|---|---|---|---|
| | | பணிகளின் எண்ணிக்கை | தொகை ரூ. (இலட்சத்தில்) |
| 1. | காவேரி வடிநிலக்கோட்டம், தஞ்சாவூர் | 38 | 113.55 |
| 2. | கல்லணைக் கால்வாய் வடிநிலக்கோட்டம், தஞ்சாவூர் | 64 | 216.75 |
| 3. | வெண்ணாறு வடிநிலக்கோட்டம், தஞ்சாவூர் | 42 | 93.95 |
| **கூடுதல்** | | **144** | **424.25** |

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் தனது கடிதத்தில், தஞ்சாவூர் காவிரி வடிநில கோட்ட செயற்பொறியாளர் மற்றும் தஞ்சாவூர் வெண்ணாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர் ஆகியோரிடமிருந்து 51 பணிகளுக்கு ரூ.110.80 இலட்சத்திற்கு அறிக்கை வரப்பெற்றது எனவும், இது தொடர்பாக, பொதுப்பணித்துறை பொறியாளர்களுடன் கலந்தாலோசனை செய்யப்பட்டு, அதனடிப்படையில் கீழ்க்கண்டுள்ளவாறு 14 பணிகளுக்குரிய தொகை ரூ.36.50 இலட்சத்தினை மட்டும் வழங்க பரிந்துரை செய்வதாக தெரிவித்துள்ளார்.

| கோட்டம் | தற்காலிக சீரமைப்பு | | அடைப்பை நீக்குதல் | | கூடுதல் | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த பணிகள் | மதிப்பு (இலட்சத்தில்) | மொத்த பணிகள் | மதிப்பு (இலட்சத்தில்) | மொத்த பணிகள் | மதிப்பு (இலட்சத்தில்) |
| வெண்ணாறு வடிநில கோட்டம், தஞ்சாவூர் | 01 | 3.00 | – | – | 01 | 3.00 |
| காவிரி வடிநிலக் கோட்டம், தஞ்சாவூர் | 04 | 5.00 | 09 | 28.50 | 13 | 33.50 |
| **கூடுதல்** | **05** | **8.00** | **09** | **28.50** | **14** | **36.50** |

4. முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் மேற்படி தற்காலிக சீரமைப்பு பணிகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு கோரி வரப்பெற்ற முன்மொழிவுகள் அரசாணை (நிலை) எண். 380, வருவாய் நிருவாகம், நாள்: 27.10.2015, குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் விதிமுறைகளின் கீழ் தகுதியுள்ள இனமாக கருதப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. | **ஆரசாணை (நிலை) எண் 380 வருவாய் (பே.மே.3(2)) துறை நாள் 27.10.2015ல்.**<br><br>இணைப்பு – 1 வரிசை எண் – 10 – **உள்கட்டமைப்பு,** உட்பிரிவு எண் 3 | வெள்ள பாதிப்பினால் சேதமடைந்த பாலங்கள் மற்றும் பாசன ஆதாரங்களின் தற்காலிக சீரமைப்பு பணிகளுக்கு நிதி உதவியானது மாநில அரசினால் அவ்வப்போது வெளியிடப்படும் பட்டியலிடப்பட்ட விலை மதிப்பின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. சிறுபாசன திட்டத்திற்கான நிதியுதவியானது ரூ.1.5 லட்சம் / ஒரு திட்டம் (சேதமடைந்தது) என வழங்கப்படுகிறது. இயற்கை சீற்றத்தால் சேதமடைந்த, நடுத்தர மற்றும் பெரிய நீர்பாசன திட்டங்களில் அரித்து செல்லப்பட்ட கரைகளுக்கு சேதமடைந்த கிராம சாலைகளுக்கு வழங்கப்படுவது போல் நிதியுதவி வழங்கப்படுகிறது. இதன் கீழ் நிதி உதவி பெறும் பணிகளுக்கு, பயன்பாட்டிலுள்ள வேறு ஏதேனும் நடப்பு திட்டத்தின் கீழ் (இரட்டைப்படி) நிதியுதவி பெற்றிருக்கக்கூடாது. |
| 2. | **ஆரசாணை (நிலை) எண் 380 வருவாய் (பே.மே.3(2)) துறை நாள் 27.10.2015ல்.**<br><br>இணைப்பு – 2 – வரிசை எண் –3 – **பாசனம்,** உட்பிரிவு எண் i மற்றும் iv | i) வெள்ள பாதிப்பினால் சேதமடைந்த கால்வாய்களின் கரைகளை உடனடியாக பலப்படுத்த மேற்கொள்ளப்படும் பணிகள் / குளங்கள் மற்றும் சிறு நீர்நிலைகளை சீரமைப்பு செய்ய சிமெண்ட், மணல் மூட்டை மற்றும் கற்களைக் கொண்டு செய்யப்படும் கட்டுமான (மேசன்) பணிகள்<br>iv) சிறு, நடுத்தர மற்றும் பெரிய நீர்பாசன திட்டங்களில் கரைகள் மற்றும் அணைக்கட்டு பகுதிகளில் ஏற்பட்ட சேதங்கள் சீரமைக்கப்படுதல். |

5. முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர், (பொது), பொதுப்பணித் துறை, சென்னை அவர்கள் கோரியவாறும் மற்றும் ஈரோடு, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர்கள் பரிந்துரை செய்துள்ளவாறும் , ஈரோடு மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழையின் (2018) போது பவானி சாகர் அணையிலிருந்து 14.08.2018 முதல் உபரி நீர் திறக்கப்பட்டதாலும், 17.08.2018 அன்று அதிகப்படியாக விநாடிக்கு 72700 கன அடி நீர் கொடிவேரி அணைக்கட்டிலிருந்து வெளியேற்றப்பட்டதாலும் அதிக வெள்ள நீரால்

சேதமடைந்த கொடிவேரி அணைக்கட்டு மற்றும் அதன் வாய்க்கால்களான தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை தலைமதகுகளில் உள்ள கட்டுமானங்களிலும் தற்காலிகமாக சீரமைப்புப் (Temporary Restoration) பணிகளுக்காக ரூ.**194.00** இலட்சமும் கர்நாடக மாநில நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழை காரணமாகவும் மேட்டூர் அணை தனது முழுக் கொள்ளளவை எட்டியதாலும் மேட்டூர் அணையிலிருந்து **16.08.2018** முதல் **21.08.2018** முடிய **2** இலட்சம் கனஅடிக்கும் அதிகமாக உபரி நீர் வெளியேற்றப்பட்டதன் காரணமாக தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட **171** தற்காலிக சீரமைப்பு பணிகளுக்கான ரூ.**492.75** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**686.75** இலட்சத்தினை (ரூபாய் அறுநூற்று எண்பத்தியாறு இலட்சம் மற்றும் எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்ய கேட்டுக்கொண்டுள்ளார்.

**தொகுப்பு**

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் (பொதுப்பணித் துறை (நீ.ஆ.து.) கோட்டத்தின் பெயர்) | தற்காலிக சீரமைப்பு பணிகளின் விவரம் | |
|---|---|---|---|
| | | பணிகளின் எண்ணிக்கை | தொகை (ரூ. இலட்சத்தில்) |
| 1. | ஈரோடு மாவட்டம் (பவானியாறு வடிநில கோட்டம்) | 18 | 194.00 |
| 2. | தஞ்சாவூர் மாவட்டம் (காவேரி வடிநில கோட்டம்) | 38 | 113.55 |
| | தஞ்சாவூர் மாவட்டம் (கல்லணை கால்வாய் வடிநில கோட்டம்) | 64 | 216.75 |
| | தஞ்சாவூர் மாவட்டம் (வெண்ணாறு வடிநில கோட்டம் தஞ்சாவூர்) | 42 | 93.95 |
| 3. | நாகப்பட்டினம் மாவட்டம் (காவேரி வடிநில கோட்டம் தஞ்சாவூர்) | 13 | 32.00 |
| 4. | திருவாரூர் மாவட்டம் (வெண்ணாறு வடிநில கோட்டம் தஞ்சாவூர்) | 01 | 3.00 |
| | திருவாரூர் மாவட்டம் (காவேரி வடிநில கோட்டம்) | 13 | 33.50 |
| மொத்தம் | | **189** | **686.75** |

**6.** மேற்காணும் சூழ்நிலையில், முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் பரிந்துரையினை ஏற்று ஈரோடு மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழையின் **(2018)** போது பவானி சாகர் அணையிலிருந்து **14.08.2018** முதல் உபரி நீர் திறக்கப்பட்டதாலும், **17.08.2018** அன்று அதிகப்படியாக விநாடிக்கு **72700** கன அடி நீர் கொடிவேரி அணைக்கட்டிலிருந்து வெளியேற்றப்பட்டதாலும் அதிக வெள்ள நீரால் சேதமடைந்த கொடிவேரி அணைக்கட்டு மற்றும் அதன் வாய்க்கால்களான தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை தலைமதகுகளில் உள்ள கட்டுமானங்களிலும் தற்காலிகமாக சீரமைப்புப் (Temporary Restoration) பணிகளுக்காக ரூ.**194.00** இலட்சமும் கர்நாடக மாநில நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழை காரணமாகவும் மேட்டூர் அணை தனது முழுக் கொள்ளளவை எட்டியதாலும் மேட்டூர் அணையிலிருந்து **16.08.2018** முதல் **21.08.2018** முடிய **2**

இலட்சம் கனஅடிக்கும் அதிகமாக உபரி நீர் வெளியேற்றப்பட்டதன் காரணமாக தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட 171 தற்காலிக சீரமைப்பு பணிகளுக்கான ரூ.492.75 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.6,86,75,000/– (ரூபாய் ஆறுகோடியே எண்பத்தியாறு இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி 6–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

**“2245 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு – 02 வெள்ளம், புயல் முதலியவை 800 ஏனைய செலவு மாநிலச் செலவினங்கள் BO வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பழுதுபார்த்தல் மற்றும் மறுசீரமைத்தல் பணிகள் 309 உதிரித் தொகை 09 ஏனையவை”**

**(பழைய த.தொ.கு 2245 02 800 BO 0997)**
**(IFHRMS DPC 2245 02 800 BO 309 09)**

8. மேலே பத்தி–6ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ரூ.6,86,75,000/–க்கான நிதி 2020–2021 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய செலவினத்தை எதிர்நோக்கி, மேலே பத்தி 6–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்க கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினம் 2020–2021 துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டு, சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படவேண்டும். இதனை துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கும் மற்றும் திருத்த மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கும் தனித்தனியாக கருத்துருக்களை உரிய நேரத்தில் நிதி (வருவாய்) துறைக்கு அனுப்புமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதி (வருவாய்) துறையின் அ.சா.எண்.36789, நாள் 23.10.2020–ல் பெறப்பட்ட இசைவுடனும், கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.761 (ஏழுநூற்று அறுபத்து ஒன்று)–இன்படியும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அதுல்ய மிஸ்ரா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

**பெறுநர்**

கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம்,
சென்னை–600 005.
ஆணையர் (பேரிடர் மேலாண்மை) தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை, சேப்பாக்கம்,
சென்னை–600 005.
மாவட்ட ஆட்சியர்,
ஈரோடு, தஞ்சாவூர்/திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம்.
மாவட்ட கருவூல அலுவலர், ஈரோடு, தஞ்சாவூர்/திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம்..
முதன்மை கணக்காயர், சென்னை–600 018/600 035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–600 008.

<u>நகல்</u>

கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
முதன்மைச் செயலாளர், பொதுப்பணித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும்
தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும்
பேரிடர் மேலாண்மைத்துறை அவர்களின் முதன்மை தனிச் செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
நிதி (வருவாய் / வ.செ–1 / வ.செ.–2/வ.வ–1) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (அ.ந.மு–2/பே.மே–3(2)) துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //